**செ. கு. எண்**:436 **நாள்**:06.12.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 6.12.2012

புதுக்கோட்டை நகரத்தைச் சேர்ந்த திரு. கமர்தீன் என்பவரின் மகன் தாசுதீன் ராஜா 28.11.2012 அன்று புதுக்கோட்டை – திருமயம் நெடுஞ்சாலையில் தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, புதுக்கோட்டையிலிருந்து – கடியாப்பட்டி கிராமத்திற்கு சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து மோதியதில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் அகால மரணமடைந்த தாசுதீன் ராஜா குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த தாசுதீன் ராஜா குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**